සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
Department of Samurdhi Development

සමාජ සවිබලගැන්වීම්, සුබසාධන හා කන්ද උඩරට උරුමය පිළිබඳ අමාත්‍යාංශය
சமூக வலுவூட்டல் நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சு
MINISTRY OF SOCIAL EMPOWERMENT, WELFARE AND KANDYAN HERITAGE

මගේ අංකය / எனது இல / My No: SDD/HO/09/COB/சுற்றறிக்கை

ඔබේ අංකය / உமது இல: / Your No: ........................................

දිනය / திகதி : 2018.01.15 / Date

சமுர்த்தி சுற்றறிக்கை இலக்கம் | சமுதாய அடிப்படை/06/2018/01

சகல மாவட்ட செயலாளர்/ மாவட்ட சமுர்த்தி மேலதிப் பணிப்பாளர் தலைமையதிபதிகள்

சகல மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்கள்

சகல பிரதேச செயலாளர்கள்

சகல ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள்

சகல சமுர்த்தி முகாமையாளர்கள்

சகல சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்

சகல சமுர்த்தி பிரதேச அமைப்புக்களின் தலைவர்கள் மற்றும் செயலாளர்கள்

சகல சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களின் தலைவர்கள் மற்றும் செயலாளர்கள்

# **சமுர்த்தி சங்கங்கள் மற்றும் சமுர்த்தி செயலணிகளுக்கு சொந்தமான உத்தியோகபூர்வே சேமிப்புக்கணக்குகளில் வைப்பிலிடப்பட்டுள்ள பணத்தினை சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு மற்றும் சமுர்த்தி பிரதேச அமைப்புக்களுக்குக் சொந்தமான உத்தியோகபூர்வ சேமிபுக் கணக்குகளுக்கு அனுப்புதல்.**

## 01. அறிமுகம்:-

2013ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க சமுர்த்தி சட்டத்தின் ஒவ்வொரு பிரிவுகளுக்குமான கட்டளைகளை நிறைவேற்றியவுடன் 1995ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க இலங்கை சமுர்த்தி அதிகார சபைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட அமைப்புக்கள் படிப்படியாக களைக்கப்படல் வேண்டும். அதன் பிரகாரம் 1995ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க இலங்கை சமர்த்தி அதிகார சபைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ''சமுர்த்தி சங்கங்கள்'' மற்றும் சமுர்த்தி செயலணிகள் 2018.03.31ஆம் திகதியிலிருந்து உத்தியோகபூர்வமாக செயலற்றப்போகும். அவ்வாறு செயலற்றப்போனவுடனேயே சமுர்த்தி சங்கங்கள் மற்றும் சமுர்த்தி செயலணிக்குச் சொந்தமான உத்தியோகபூர்வ சேமிப்புக் கணக்குகளிலிருந்த வைப்புத் தொகையினை 2013ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க சமுர்த்தி சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்கள் மற்றும் சமுர்த்தி பிரதேச அமைப்புக்களுக்குச் சொந்தமான உத்தியோகபூர்வ சேமிப்புக் கணக்குகளுக்கு பணத்தினை அனுப்புவதற்குறிய ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் அச்சுற்றறிக்கையின் மூலம் வழங்கப்படுகின்றது.

1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya ,Battaramull

| | අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் தலைமையதிபதி / Director General | අධ්‍යක්ෂ (මානව සම්පත්) / பணிப்பாளர் ( மனிதவளம்) / Director (Human Resource) | ප්‍රධාන ගණකාධිකාරී / பிரதான கணக்காளர் / Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය) / பணிப்பாளர் (குறு நிதி ) / Director ( Micro Finance) | කාර්යාලය / அலுவலகம் / Office |
|---|---|---|---|---|---|
| Tel- | 011-2873802/2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 011-2887280 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | Hot Line: 011- 2887722 |
| E-mail- | dg@divineguma.gov.lk | diradmin@divineguma.gov.lk | finance@divineguma.gov.lk | Hot Line:0112-885582 | |
| | | Hot Line : 0112-889007 | | | |

**02. சமுர்த்தி சங்கத்துக்குறிய உத்தியோகபூர்வ சேமிப்புக் கணக்குகளின் வைப்புத் தொகையினை அனுப்புதல்.**

2.1. 1995ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க இலங்கை சமுர்த்தி அதிகார சபை சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட சமுர்த்தி சங்கங்களின் உத்தியோகபூர்வ சேமிப்புக் கணக்கு சமுர்த்தி வங்கிச் சங்கத்தில் ஆரம்பிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்தது.

2.2. 2013ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க சமுர்த்தி சட்டத்தின் 09வது பிரிவுக்கு ஏற்றதாக தாபிக்கப்பட்ட சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்கள் 2017 மார்ச் 07ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைகளுக்கு ஏற்ப செயற்பட்டவுடனேயே சமுர்த்தி சங்கங்கள் செயலற்ற நிலைக்குள்ளாகியது.

2.3. செயற்படாத நிலைக்குள்ளான சமுர்த்தி வங்கங்களின் அங்கத்தவத்தினைப்பெற்றிருந்த சமுர்த்தி பயனாளிகள் (சமுர்த்தி நிவாரணம் பெறுவோரும் நிவாரணம் பெறாத குறைந்த வருமானம் பெறுவோரும்) சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புகளின் அங்கத்துவத்தினைப் பெற்றவுடன் தற்போது கிராமிய மட்டத்திலுள்ள சமுர்த்தி பயனாளிகள் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பில் ஒன்று சேர்ந்துள்ளனர்.

2.4. சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களில் சேகரிக்கப்படுகின்ற நிதி சமுர்த்தி சட்டத்தின் 13வது பிரிவிற்கமைய சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியொன்றில் வைப்புச் செய்யப்பட்டு கணக்குகளைப் பராமரிக்க வேண்டியுள்ளது.

2.5. 2017ஆம் ஆண்டின் டிசம்பர் 31ம் திகதியில் ஒவ்வொரு சமுர்த்தி சங்கத்தினது பெயரிலும் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியில் பராமரித்துச்செலவு உத்தியோகபூர்வ கணக்கின் நிலுவையினது ஆகக் குறைந்த வைப்புத் தொகைக்கு சமனான தொகை மாத்திரம் எஞ்சியுள்ளவாறு பராமரித்த வைப்புப்பணம் சகலதையும் 2018 ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் பெயரில் ஆரம்பித்து பராமரித்துச் செல்கின்ற உத்தியோகபூர்வ சேமிப்புக்கணக்கிற்கு பற்று சாட்டுதல் பத்திரம், மற்றும் வரவுச் சாட்டுதல் பத்திரம் என்பவற்றினைப் பயன்படுத்தி பணத்தினை அனுப்புதல் வேண்டும்.

2.6. சமுர்த்தி சங்கங்களுக்குறிய உத்தியோகபூர்வ சேமிப்புக் கணக்கில் ஆகக் குறைந்த வைப்புத் தொகைக்கு உட்பட்டதாக 2018 மார்ச் 31ஆம் திகதி வரை பராமரித்துச் சென்று அன்றைய தினத்தில் வைப்பிலுள்ள சகல தொகையினையும் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்குச் சொந்தான சேமிப்புக் கணக்கில் காட்டுதல் பற்று மற்றும் சாட்டுதல் வரவு வவுச்சர்களைப் பயன்படுத்தி பணத்தினை அனுப்பியதன் பின்னர் சமுர்த்தி சங்கங்களுக்குறிய உத்தியோகபூர்வ சேமிப்புக் கணக்குகளை மூடிவிடல் வேண்டும்.

2.7. மேலே 2.5 மற்றும் 2.6 இன் பிரகாரம் செயற்படுத்துவதற்கு முன்னர் அங்கத்தவர்களின் இணைக்கப்பாட்டினை பெற்றுக்கொள்ளும் பொருட்டு சமுர்த்தி சங்கத்தின் உத்தியோகபூர்வ கணக்கினை இறுதியாக நெறிப்படுத்தும் அதிகாரத்தினைக் கொண்ட கௌரவ தலைவர், கௌரவ செயலாளர், கௌரவ பொருளாளர் ஆகியோரின் கையொப்பத்துடன் எழுத்து மூல கோரிக்கையினைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

2.8. சமுர்த்தி சங்கங்களின் நிதியங்களை சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் உத்தியோகபூர்வ சேமிப்புக்கணக்கிற்கு மாற்றி அது தொடர்பில் சமுதாய அடிப்படை அமைப்பினை விளக்கமளிப்பதற்கு வங்கி முகாமையாளர் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

## 03. சமுர்த்தி செயலணிகளுக்குச் சொந்தமான உத்தியோகபூர்வ சேமிப்புக் கணக்கில் வைப்புத் தொகையினை அனுப்புதல்.

3.1. 1995 ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க சமுர்த்தி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் இளைஞர், யுவதிகளின் அங்கத்தவத்துடன் உருவாக்கப்பட்ட ‘‘சமுர்த்தி செயலணி’’களின் உத்தியோகபூர்வ கணக்கு சமுர்த்தி வங்கிச் சங்கத்தில் ஆரம்பிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்தது.

3.2. ‘‘சமுர்த்தி செயலணிகளில்’’ அங்கத்துவத்தினைப் பெற்றுக் கொண்டுள்ள இளைஞர் குழு சமுர்த்தி சட்டம் மற்றும் அதிவிசேட வர்த்தமானியின் கட்டளைகளுக்கு ஏற்றதாக சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களின் அங்கத்தவத்தினைப் பெற்றுக் கொள்ள சந்தர்ப்பத்தினை வழங்குவதனடிப்படையில் ‘‘சமுர்த்தி செயலணி’’ செயலற்றுப்போயுள்ளது.

3.3. செயற்படாமலுள்ள ‘‘சமுர்த்தி செயலணி’’களுக்குச் சொந்தமான உத்தியோகபூர்வ சேமிப்புக் கணக்கின் கணக்கிலுள்ள வைப்புத் தொகையினை கிராம சேவகர் பிரிவுக்குள் வதியும் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களின் அங்கத்துவத்திகைப் பெற்றுக் கொள்ளக்கூடிய மக்களின் நிதியாகும் என்பதனாலும் அக்கணக்குகளில் உள்ள தொகை சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களுக்கு அனுப்பும் போது ஏற்படும் நடைமுறைச் சிக்கல்களை கவனத்திற்கொண்டு சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களின் கூட்டுச்சேர்வுடன் உருவாக்கப்பட்ட சமுர்த்தி பிரதேச அமைப்புக்களுக்குச் சொந்தமான உத்தியோகபூர்வ சேமிப்புக் கணக்கிற்கு பணத்தினை அனுப்புதல் வேண்டும்.

3.4. சமுர்த்தி பிரதேச அமைப்புக்களில் சேரும் தொகையினை சமுர்த்தி சட்டத்தின் 17(க) பிரிவுற்கமைய சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கம் ஒன்றில் வைப்புச் செய்து கணக்கினைப் பராமரித்துச் செல்ல வேண்டியுள்ளது.

3.5. 2017 டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் ‘‘ஒவ்வொரு சமுர்த்தி செயலணியின்’’ பெயரில் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியில் பராமரித்துச் சென்ற உத்தியோகபூர்வ சேமிப்பு கணக்கில் ஆகக் குறைந்த வைப்புத் தொகைக்கு சமனான தொகை மாத்திரம் எஞ்சியுள்ள விதத்தில் பராமரித்துக் கொண்டு வைப்புத் தொகை சகலதற்கும் 2018 ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர் ‘‘முகாமையாளர் ........................................ சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்தின் ................................................ என்ற இலக்கத்தினையுடைய ........................................... சமுர்த்தி பிரதேச அமைப்பின் கணக்கில் வரவின் பொருட்டு வரையப்பட்ட காசோலை ஒன்றின் மூலம் குறித்த சமுர்த்தி பிரதேச அமைப்புக்குச் சொந்தமான உத்தியோகபூர்வ சேமிப்புக் கணக்கில் வைப்புகளின் பொருட்டு சமுர்த்தி வங்கி முகாமையாளரினால் தலைமையக சமுர்த்தி முகாமையாளருக்கு முறையான பிரகாரம் ஒப்படைத்ததன் பின்னர் தலைமையக சமுர்த்தி முகாமையாளருக்கு சமுர்த்தி பிரதேச அமைப்பின் உத்தியோகபூர்வ சேமிப்புக்கணக்கில் வைப்புச்செய்தல் வேண்டும். உத்தியோகபூர்வ சேமிப்புக்கணக்கின் வைப்பின் பொருட்டு சமுர்த்தி வங்கிச் முகாமையாளரால் தலைமையக சமுர்த்தி முகாமையாளர் ஊடாக சமுர்த்தி பிரதேச அமைப்பின் கௌரவ தலைவருக்கு முறையான பிரகாரம் ஒப்படைத்தல் வேண்டும்.

3.6. சமுர்த்தி செயலணிகளுக்குச் சொந்தமான உத்தியோகபூர்வ சேமிப்புக் கணக்கில் ஆகக்குறைந்த வைப்புத் தொகைக்கு உட்பட்டதாக 2018ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் திகதி வரை பராமரித்துச் சென்று அன்றைய தினத்தில் வைப்பிலுள்ள சகல தொகையும் சமுர்த்தி பிரதேச அமைப்பின் உத்தியோகபூர்வ சேமிப்புக் கணக்கில் மேலே 3.5இன் பிரகாரம் செயற்பட்டு வைப்பிலிடல் வேண்டும்.

3.7. சமுர்த்தி செயலணிக்குச் சொந்தமான உத்தியோகபூர்வ சேமிப்புக் கணக்குகளுக்கு வைப்புத் தொகை சகலதையும் 2018 மார்ச் 31ஆம் திகதி சமுர்த்தி பிரதேச அமைப்பின் உத்தியோகபூர்வ சேமிப்புக் கணக்கிற்கு பணத்தை அனுப்பியதன் பின்னர் சகல சமுர்த்தி செயலணிகளுக்கும் சொந்தமான உத்தியோகபூர்வ சேமிப்புக் கணக்குகள் செயலற்றுப்போகும்.

3.8. மேலே இலக்கம் 3.5 மற்றும் 3.6 இன் பிரகாரம் செயற்படுவதற்கு முன்னர் அங்கத்தவர் இணக்கப்பாட்டினைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு ‘‘சமுர்த்தி செயலணி’’களின் உத்தியோகபூர்வ சேமிப்புக் கணக்கினை இறுதியாக நெறிப்படுத்த அதிகாரமளிக்கப்பட்ட கௌரவ தலைவர்கள், கௌரவ செயலாளர்கள், மற்றும் கௌரவ பொருளாளர்கள் அல்லது நிதிச் செயலாளர்கள் ஆகியோர்களின் கையொப்பதுடன் எழுத்து மூல கோரிக்கை ஒன்றினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். இந்த உத்தியோகத்தர்கள் இல்லாவிடத்து பிரதேச செயலாளரின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

## 04. சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்கள் மற்றும் சமுர்த்தி பிரதேச அமைப்புக்களுக்குச் சொந்தமான உத்தியோகபூர்வ சேமிப்புக் கணக்குகளின் வைப்புத் தொகைப் பணத்தினை பயன்படுத்துதல்.

4.1. சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களுக்குச் சொந்தமான உத்தியோகபூர்வ சேமிப்புக்கணக்கில் வைப்புச் செய்த நிதியினை பயன்படுத்த முடியுமான பணிகள்.

(அ). 2013ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க சமுர்த்தி சட்டத்தின் 10வது பிரிவின் குறிப்பிடப்பட்டுள்ள சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களின் குறிக்கோள்களை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு 11வது பிரிவின் குறிப்பிடப்பட்டுள்ள தத்துவங்களுக்கமைய 12வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை செயற்படுத்தும் பொருட்டு.

(ஆ) 2009/8 என்ற இலக்கத்தினையுடைய 2017மார்ச் 07ஆம் திகதியிடப்பட்ட இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின் 4(1)(அ) கட்டளைகளின் கீழ் பந்தி இலக்கம் 15(7) இல் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளின் பொருட்டு.

(இ) பணிப்பாளர் தலைமையதிபதியினால் வெளியிடப்படும் சுற்றறிக்கையில் குறிப்பிடப்படும் விசேட பணிகளின் பொருட்டு மாத்திரமேயாகும்.

4.2. சமுர்த்தி பிரதேச அமைப்புக்களுக்குச் சொந்தமான உத்தியோகபூர்வ சேமிப்புக் கணக்குகளில் வைப்புச் செய்த தொகையினை பயன்படுத்த முடியுமான பணிகளாவன.

(அ) 2013ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க சமுர்த்தி சட்டத்தின் 16வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள சமுர்த்தி பிரதேச அமைப்புக்களின் குறிக்கோள்களை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு 17வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தத்துவங்களுக்கமைய 18வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை செயற்படுத்தம் பொருட்டு அத்துடன்.

(ஆ). மேலே 4.1 (ஆ)இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் சமுர்த்தி பிரதேச அமைப்புக்குறியதான பணிகளின் பொருட்டும்.

(இ). பணிப்பாளர் தலைமையதிதியினால் வெளியிடப்படும் சுற்றறிக்கையில் குறிப்பிடப்படும் விசேட பணிகளின் பொருட்டும் மாத்திரமேயாகும்.

## 05. அனுப்பிய வைப்புத் தொகை தொடர்பாக அறிக்கையிடல்.

5.1. மேலே 2.5 மற்றும் 2.6இன் பிரகாரமும் 3.5 மற்றும் 3.6இன் பிரகாரமும் செயற்படுவதன் பின்னர் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியிலிருந்து இணைப்பு 1இன் பிரகாரம் பெற்றுக்கொண்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச்சங்க முகாமையாளர்களினால் 02வது இணைப்புப்படிவத்திற்கமைய விபரங்களுடனான அறிக்கையொன்றினை மாவட்ட சமுர்த்தி பணிப்பாளருக்கு 2018.02.10ஆம் திகதிக்கு முன்னர் (2018 ஜனவரி 31ஆம் திகதியில் அறவிட்ட வைப்புத்தொகைகள் பற்றிய விபரம்) 2018.04.10ஆம் திகதிக்கு முன்னரும் (2018 மார்ச் மாதம் 31ஆம் திகதி அனுப்பிய வைப்புத் தொகை பற்றிய விபரம்) அனுப்புதல் வேண்டும்.

5.2. மேலே 5.1 இன் பிரகாரம் சமுர்த்தி வங்கிச் சங்க முகாமையாளர்களிடமிருந்து கிடைத்த அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு மாவட்ட வங்கி முகாமையாளர்களால் இணைப்பு 03இன் பிரகாரம் தயாரித்த அறிக்கையொன்றினை 2018.02.15ஆம் திகதிக்கு முன்னரும், 2018.04.15ஆம் திகதிக்கு முன்னரும் சமுதாய அடிப்படை அமைப்பு பிரிவுப் பொறுப்பு பணிப்பாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

குறிப்பு:-

1. சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு மற்றும் சமுர்த்தி பிரதேச அமைப்பினால் பின்பற்றப்பட வேண்டிய கணக்கீட்டு முறைகளுக்குறிய சுற்றறிக்கைகள் பின்னர் வெளியிடப்படும்.
2. இச்சுற்றறிக்கை தொடர்பில் ஏதேனும் விளக்கங்கள் தேவைப்படின் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் சமுதாய அடிப்படை அமைப்புப் பிரிவின் பிரதிப் பணிப்பாளரை தாமதமின்றி தொடர்பு கொள்ளவும் (தொலைபேசி இலக்கம் 011-2873794, 071-4118226)

கலாநிதி. சுனில் ஜயந்த நவரத்ன.
பணிப்பாளர் தலைமையதிபதி

பிரதிகள்:-

1. சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் கௌரவ அமைச்சர் திரு. எஸ்.பி. திசாநாயக்க அவர்கள் - த.கூ.க.பொருட்டு.
2. சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் கௌரவ பிரதி அமைச்சர் திரு. ரஞ்சன் ராமநாயக்கா அவர்கள் - த.கூ.க.பொருட்டு.
3. செயலாளர், சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சு - த.கூ.க.பொருட்டு.
4. மேலதிக செயலாளர், (அபிவிருத்தி) சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சு - த.கூ.க.பொருட்டு.
5. மேலதிக செயலாளர், (நிர்வாகம் மற்றும் நிதி) சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சு - த.கூ.க.பொருட்டு.
6. பிரதம கணக்காளர், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - த.கூ.க.பொருட்டு.
7. பிரதான உள்ளகக் கணக்காய்வாளர், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - த.கூ.க.பொருட்டு.
8. சகல பணிப்பாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - த.கூ.க.பொருட்டு.

Translated By:- M.M.M.Jawhar (Translator)

**இணைப்பு - 01**

**<u>சமுர்த்தி சங்கம் மற்றும் சமுர்த்தி செயலணிகளின் உத்தியோகபூர்வ சேமிப்புக் கணக்குகளின் வைப்புத் தொகை ................................ ஆம் திகதி சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு மற்றும் சமுர்த்தி பிரதேச அமைப்புக்களின் உத்தியோகபூர்வ சேமிப்புக் கணக்குகளுக்கு அனுப்புவதற்குறிய அறிக்கை.</u>**

சமுர்த்தி முகாமையாளர்
சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கம்

..........................................................................

மாவட்டம்: ......................................................
பிரதேச செயலகப்பிரிவு :- .......................................................
சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி : ..................................................................

| தொ. இல | பணத்தை அனுப்பிய சமுர்த்தி சங்கம் | | | பணத்தை அனுப்பிய சமுர்த்தி செயலணி | | |
|---|---|---|---|---|---|---|
| | சங்கத்தின் பெயர் | தொகை | | செயலணியின் பெயர் | தொகை | |
| | | ரூபா | சதம் | | ரூபா | சதம் |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| மொத்தம். | | | | | | |

| **தயாரித்தவர்** | **பரீட்சித்தவர்** | **சிபாரிசு செய்தவர்** | **உறுதிப்படுத்தியவர்** |
|---|---|---|---|
| கணக்கு எழுதுனர் | உதவி முகாமையாளர் | வலய உதவியாளர் | வங்கி முகாமையாளர் |
| பெயர்:........................... | பெயர்:......................... | பெயர்:........................ | பெயர்:......................... |
| கையொப்பம்: ............. | கையொப்பம்: ............. | கையொப்பம்: ............. | கையொப்பம்:.............. |

**இணைப்பு - 02**

மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்,
மாவட்ட சமுர்த்திப் பணிமனை

.........................................................................

**சமுர்த்தி சங்கம் மற்றும் சமுர்த்தி செயலணிகளின் உத்தியோகபூர்வ சேமிப்புக் கணக்குகளின் வைப்புச் தொகை ................................ ஆம் திகதி சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு மற்றும் சமுர்த்தி பிரதேச அமைப்புக்களின் உத்தியோகபூர்வ சேமிப்புக் கணக்குகளுக்கு அனுப்புவதற்குறிய அறிக்கை.**

| தொ. இல | சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியின் பெயர் | பணத்தை அனுப்பிய சமுர்த்தி சங்கம் | | | பணத்தை அனுப்பிய சமுர்த்தி செயலணி | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | சங்கத்தின் பெயர் | தொகை | | செயலணியின் பெயர் | தொகை | |
| | | | ரூபா | சதம் | | ரூபா | சதம் |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| மொத்தம். | | | | | | | |

**தயாரித்தவர்**
கணக்கு எழுதுனர்

பெயர்:................................

கையொப்பம்: ....................

**பரீட்சித்தவர்**
உதவி முகாமையாளர்

பெயர்:................................

கையொப்பம்: .....................

**உறுதிப்படுத்தியவர்**
வங்கிச் சங்க முகாமையாளர்

பெயர்:.........................

கையொப்பம்: .............

பணிப்பாளர்,
சமுதாய அடிப்படை அமைப்பு,
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்,

**சமுர்த்தி சங்கம் மற்றும் சமுர்த்தி செயலணிகளின் உத்தியோகபூர்வ சேமிப்புக் கணக்குகளின் வைப்புச் தொகை ................................ ஆம் திகதி சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு மற்றும் சமுர்த்தி பிரதேச அமைப்புக்களின் உத்தியோகபூர்வ சேமிப்புக் கணக்குகளுக்கு அனுப்புவதற்குறிய அறிக்கை.**

| தொ. இல | பிரதேச செயலகப் பிரிவு | சமுரத்தி சமுதாய அடிப்படை வங்கியின் பெயர் | பணத்தை அனுப்பிய சமுர்த்தி சங்கம் | | பணத்தை அனுப்பிய சமுர்த்தி செயலணி | |
|---|---|---|---|---|---|---|
| | | | தொகை | | தொகை | |
| | | | ரூபா | சதம் | ரூபா | சதம் |
| | 1).......................... | 1)......................... | | | | |
| | | 2)......................... | | | | |
| | | 3)......................... | | | | |
| | | உப மொத்தம் | | | | |
| | 2).......................... | 1)......................... | | | | |
| | | 2)......................... | | | | |
| | | 3)......................... | | | | |
| | | உப மொத்தம் | | | | |
| | 3).......................... | 1)......................... | | | | |
| | | 2)......................... | | | | |
| | | 3)......................... | | | | |
| | | உப மொத்தம் | | | | |
| | | | | | | |
| மொத்தம் | | | | | | |

**தயாரித்தவர்**
மாவட்ட வங்கி முகாமையாளர்

பெயர்:................................

கையொப்பம்: ....................

**பரீட்சித்தவர்**
ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்

பெயர்:................................

கையொப்பம்: .....................

**உறுதிப்படுத்தியவர்**
மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்

பெயர்:.........................

கையொப்பம்: ..............